★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a New paper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர்: 20 தை 7 ஸபர் 20 இதழ் 34)
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20-1-79

## ஹிந்தி மொழியை கற்கவேண்டுமென்று சட்டம் எதுவும் கிடையாது

### சென்னையில் பிரதமர் தேசாய்

(சென்னை] 'ஹிந்தி மொழியைக் கற்பது ஒரு தேசபக்தனுக்குரிய கடமையாகும். ஹிந்தி கற்க வேண்டுமென கட்டாயம் உருவாகுமானால் அது தேசபக்தியினால் தான் இருக்க முடியும் சட்டத்தினால் அல்ல' இவ்வாறு பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இன்று சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினர். ஹிந்தித் திணிப்பு எதிர்ப்பு பற்றி கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பிரதமர் பதிலளிக்கையில், 'இவ்வாறு ஒன்றுக்காக இவ்விண்முயற்சி

[6ம் பக்கம் பார்க்க]

RECEIVED PERIODICALS SECTION UNIVERSITY OF SRI LANKA - JAFFNA LIBRARY ...-1-19..

## தரப்படுத்தல் குறித்து ஜனாதிபதி மாநாடு கூட்டத் தவறினால்

# ஆட்சிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் கிளர்ச்சி!

## கூட்டணி பாராளுமன்றக் குழு முடிவு

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழக அனுமதியில் கடைப்பிடிக்கப்படும் தரப்படுத்தல் குறித்து ஆராயும்பொருட்டு ம நாடு ஒன்றைக் கூட்டுமாறு ஜனாதிபதிக்கு கூடடணி விடுத்திருந்த அழைப்பை ஏற்று ஜனாதிபதி மாநாட்டைக் கூட்டாவிடின், தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்திலும், வெளியிலும் கிளர்ச்சிசெய்யும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழு நேற்று முன்தினம் கொழும்பில் கூடி தீர்மானித்தது

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர்கூட்டணி பாராளுமன்றக் குழு கூடியபோது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

சில அமைச்சுக்களிலும், திணைக்களங்களிலும் அமைப்பாளர்களினாலும் ஏனையோராலும். மேற்கொள்ளப்படும் தலையீட்டினால் கூட்டணி எம். பி கள் அங்கம் வகிக்கும் தொகுதிகளில் நடைபெறும் விஷயங்கள் ஆராயப்பட்டு இதனையொட்டி நிலைமையைத் தெளிவுபடுத்தும் பொருட்டு எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் ஜனாதிபதிக்கு எழுதவேண்டும்.

இக்கடிதத்திற்கு ஜனாதிபதி அளிக்கும் பதிலைப் பொறுத்து உத்தியோகபூர்வ நிகழ்ச்சிகளில் கூட்டணி எம். பி ககள் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பது பின்னர் தீர்மானிக்கப்படும்

அரசினால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதித்திட்டம் ஆராயப்பட்டு பின்தங்கிய பகுதிகளுக்குச் சலுகையளிக்கப்படவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ளும் அதேநேரத்தில் தகுதி அடிப்படையிலேயே பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் அனுமதிக்கப்படவேண்டுமென்பதை அரசுக்கு வலியுறுத்த வேண்டும்.

குறிப்பிட்ட விகிதத்தைப் பின்தங்கிய பகுதிகளுக்கு ஒதுக்கிவிட்டு எஞ்சிய பகுதிகளில் உள்ள மாணவர்கள் தகுதி அடிப்படையில் அனுமதிக்கப்படவேண்டும் என்று அரசைக் கோரவேண்டும்.

இதனையொட்டி ஜனாதிபதியிடம் ஏற்கனவே அழைக்குமாறு கேட்ட மாநாட்டை விரைவில் அழைக்கச்செய்ய வேண்டும். தவறின் இதனையொட்டிப் பாராளுமன்றத்

(6-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி மத்தியகுழு இன்று கூடுகிறது

]கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு இன்று ...கிறது. காலை மட்டக்களப்பில் கூடு ப டிருப்பு எம். பி திரு. பூ. கணேசலிங்கம் இல்லத்தில் நீண்டகால இடைவெளிக்குப் பின் நடைபெறும் இக்கூட்டத்தில் இன்றைய அரசியல் நிலை குறித்து ஆராயப்படும். [இ]

## குருநகர் வீடமைப்புத்திட்ட விவகாரம்:

## யாழ். எம்.பி. அரசாங்க அதிபரை கொழும்பில் சந்தித்தார்

[கொழும்பு]

குருநகர் வீடமைப்புத்திட்ட விவசாரம்குறித்து யாழ். எம். பி. திரு. வெ யோகேஸ்வரன் நேற்று யாழ் அரசாங்க அதிபர் திரு, லயனல் பெர்னாண்டோவை கொழும்பில் சந்தித்துப் பேச்சுநடத்தினர்.

இப்பேச்சு வார்த்தைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து நடைபெறும்.

குறிப்பிட்ட வீடமைப்புத் திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்தில் இராணுவ முகாமோ வேறு முகாம்களோ அமைக்கும்திட்டம் அரசுக்குக் கிடையாது என்றும் அரசாங்க ஊழியர்களுக்கான வீடுகளே அங்கு அமைக்கப்பட்டுள்ளதாக திரு. பெர்னாண்டோ எம்.பி யிடம் தெரிவித்தாராம்

குருநகர் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் பட்சத்தில் அவ்விடத்தில் அரசஊழியர்களுக்கு விடுதிகளை அமைக்கும் திட்டம்

[6ம் பக்கம் பார்க்க]

## பல்கலைக்கழக அனுமதி

# கல்வி அமைச்சரை கூட்டணிக் குழு சந்தித்தது

[கொழும்பு]

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் தமிழ், சிங்கள மாணவர்களின் தொகை குறித்து விரிவாக ஆராய்ந்த பின்னரே பரீட்சை முடிவுகள் வெளியிடப் படுகின்றன என கல்வி அமைச்சர் திரு நிசங்கா விஜயரத்தின தமைச் சந்தித்த கூட்டணி தூதுக்குழுவினரிடம் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பிக்கள் குழு ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் தலைமையில் நேற்று கல்வி அமைச்சரைச் சந்தித்து திருவாளர்கள்: எம். சிவசிதம்பரம், இராசம்பந்தர், பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகித்தனர்.

கல்வி அமைச்சின் செயலாளர் திரு. திசநாயக்கா, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஸ்டான்லி கல்பகேயும் சந்திப்பின்போது உடன் இருந்தனர்

பல்கலைக்கழகங்களுக்கு சகல மாணவர்களும் திறமை அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட வேண்டும், அதே வேளையில் பின்தங்கிய பகுதி மாணவர்களுக்கு குறிப்பிட்ட விகிதத்தை குறித்த காலத்திற்கு ஒதுக்கலாம் என்று கூட்டணியினர் கல்வி அமைச்சரிடம் வலியுறுத்தினர்.

தற்போதைய பல்கலைக் கழக அனுமதி முறையினால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும் கூட்டணிக் குழுவினர் எடுத்துக் கூறினர்

இவ்வருடத்தில் வைத்திய பீடத்திற்கும் பொறியியல் பீடத்திற்கும் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்

(6,ம் பக்கம் பார்க்க)

## சஞ்சய் காந்தி கைது!

புதுடில்லி, ஜன. 19

திருமதி இந்திரா காந்தியின் புதல்வர் சஞ்சய்காந்தி இன்று கைதுசெய்யப்பட்டார்

லக்னோ நீதிமன்ற நீதிபதியின் உத்தரவுக்கிணங்க அந்நீதிமன்றத்தில் முன் ஆஜராகத் தவறியமைக்கே சஞ்சய்காந்தி கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் 10 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்ட காந்தியை இம்மாதம் 27ம் திகதி மீண்டும் கோர்ட்டில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டது. [இ]


## பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ். சதங்கை நர்த்தநாலய ஆசிரியை திருமதி லீலா ஆறுமுகையாவின் மாணவி செல்வி பத்மாசனி நடராசாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை 6-30 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் பல்கலைக் கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் திரு கா. இந்திரபாலா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியர் திரு. க. கைலாசபதி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.



தொகுப்புரை:
இலங்கை வானொலிபுகழ்
கே.எஸ். ராஜா

1386

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நவீன வசதிகளடங்கிய, நெல் காய்ச்சும் யந்திரம் பொருத்தப்பட்ட அரிசி ஆலை ஒன்று வவுனியாவில் விற்பனைக்கு உண்டு 22-1-79, 23-1-79 நேரில் தொடர்புகொள்ளவும். 30/1 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1341

கிளிநொச்சியில் நகர எல்லைக்குள் சகல வசதிகளும் கொண்ட பேக்கரி, வீடு, காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் உதயம்ஸ், கண்டி வீதி. கிளிநொச்சி. 1383

## தேவை

பாதுகாப்புச் சேவைக்கு பாதுகாவலர்கள் தேவை ஓய்வு பெற்றவர்களும் வரலாம். 20-1-79 முதல் 22-1-79 வரை காலை 9 மணிக்கும் 11 மணிக்கு மிடையில் நற்சாட்சிப்பத்திரங்களுடன் தெல்லிப்பழை தபால் கந்தோருக்கு அருகாமையிலுள்ள பாதுகாப்புச் சேவை அலுவலகத்திற்கு நேரில் வரவும். 1374

எமது புத்தகசாலைக்கு புத்தக அனுபவமுள்ள விற்பனையாளர்கள், கணக்காளர், முகாமைபாளர் தேவை கல்வித் தகமைகள், சான்றிதழ்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்பம் முடிவு திகதி 21-1-1979. தபால் உறையின் இடது கரையில் எதற்கு விண்ணப்பம் அனுப்புகிறீர்கள் என்பதை குறிப்பிட வேண்டும். அதிபர், பூபாலசிங்கம் புத்தகசாலை, 4, டஸ் நிலையம், யாழ்ப்பாணம். 1358

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஸ்தாபனத்திற்கு நன்கு அனுபவமும் தேர்ச்சியுமுள்ள கவுண்டர் கிளார்க் தேவை. அனுபவமுள்ளவர்கள் மட்டும் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பரஇல. 1370 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம் 1370

## வாடகைக்கு

டல்கலைக்கழக பாடசாலை மாணவருக்கு அறை வாடகைக்கு உண்டு உடனடியாகத் தொடர்பு கொள்க. சண்முகநாதன், 4, கொன்வென்ற் ரேட், யாழ்ப்பாணம். 1378

## பயிற்சி

வார இறுதி றேடியோ மெக்கானிக் பயிற்சி 03-02-1979 ஆரம்பமாகவுள்ளது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னலொஜி 11/B மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 1379

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங் ரேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும் ஆங்கிலமும் மூதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம் 1291

## WANTED

Wanted a lady stenographer with good knowledge of English, and at least two years experience. Apply Advt. No: 1369, C/o Eelanadu, Jaffna. 1369

---

### பருத்தித்துறை நகரசபை

## விளம்பரம்

பருத்தித்துறை நகரசபை வளவில் காலஞ்சென்ற முன்னை நாள் தலைவர் திரு ந. நடராசா அவர்களுடைய சிலையை வைப்பதற்கு அனுமதிகேட்டு அதற்குரிய குழுத்தலைவர் விண்ணப்பித்துள்ளார். இப்மன்ற எல்லைக்குள் வசிக்கும் பொது மக்கள் எவராயினும் ஆட்சேபனை தெரிவிக்க இருந்தால் இந்த விளம்பரத் திகதியிலிருந்து பத்து நாட்களுக்குள் எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அன்ரன் அல்பிரட்,
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை நகரம்.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை.
17-1-79. 1380

---

### 3 புசல் வெற்றுச்சாக்கு கொள்வனவிற்கான

## கேள்வி விண்ணப்பம்

மேற்படி வெற்றுச் சாக்கு கொள்வனவிற்கான கேள்வி விண்ணப்பப் பத்திரம், தரமும், விலையும் பிரித்துக்கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன் என்ற விலாசத்திற்கு 30-1-79-க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

திகதி: 17-1-79. 1361

---

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற காரைநகர் வடக்கு சடையாளி சின்னப்பொடியர் தம்பிப்பிள்ளை கைம்பெண் சௌந்தரம் என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்.

— மரண மெய்தியவர்

தம்பிப்பிள்ளை சிவசண்முகநாதன் சடையாளி, காரைநகர் வடக்கு தற்பொழுது லக்கிஸ்ரோர்ஸ், ஒட்டுசுட்டான்.

— மனுதார்.

மரண சாதன )
நியாயாதிக்கம்) இல: 3118

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ஆந் நாளன்று, அதி- அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்.
பதிவாளர்.

1979-ஆம் ஆண்டு தை மாதம் 5-ந் திகதி. 1360

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

---

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய கட்டளை

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

சிதம்பரநாதர் தில்லையம்பலம் கைம்பெண் சின்னப்பிள்ளை என்பவரின் மரண சாதனம் சம்பந்தமான விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன)
நியாயாதிக்கம்) இல. த/3397.

தில்லையம்பலம் வேலுப்பிள்ளை, வட்டுக்கோட்டை கிழக்கு.

மனுதார்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் திகதி அதில், அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி.
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

1373

---

## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டணம், கிளிநொச்சி

புதியசந்தையில் வியாபாரத்தலம் அமைத்தல்

01-03-1979 தொடக்கம் ஐந்து வருட காலத்திற்கு பட்டணசபை கட்டளைச் சட்டதிட்டங்களுக்கு அமைவான நிபந்தனைகளுடன் புதிய சந்தையில் கடைகள் 1 தொடக்கம் 50 வரை அமைத்து வியாபாரம் செய்வதற்கு உரிமை பெறுவதற்கான கேள்வி விண்ணப்பங்கள் 08-02-1979 பிற்பகல் 2-00 மணிவரை என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்வி விண்ணப்பங்கள் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 2/-ம், மீளளிக்கப்படும் கேள்விப் பிணைப் பணம் ரூபா 250/-ம் செலுத்துவதன் பேரில் 08-02-1979 நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
கிளிநொச்சிப்பட்டணம்,
கிளிநொச்சி 1979-01-18, 1377

---

### சாவகச்சேரி நகரசபை

## ஆதனவரி அறிவித்தல்

1978-ம் ஆண்டு 4-ம் கந்தாயத்திற்குரிய ஆதனவரி செலுத்துவதற்கு 31-01-79ம் திகதிவரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, நீங்கள் செலுத்தவேண்டியவரிகளை 31-01-79-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும் தவறின் ஆதனவரியுடன் பத்து வீதம் பற்றுணைப் பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்

த. நவரத்தினராசா
விசேட ஆணையாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 17-01-79
1376

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M B 14584

1. குழந்தைவேலு சுப்பிரமணியம்,
2. சுப்பிரமணியம் இராசரத்தினம்

அரசடி, ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம்.
எதிராக வழக்காளிகள்.

விசுவநாதர் மூத்து 303 பலாலிரேட், திருநெல்வேலி தெற்கு யாழ்ப்பாணம்.
எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 14584ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1979ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் திகதி புதன்கிழமை மு. ப. 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபாய் 12,800 பின் 16-9-74 தொடக்கம் 15-5-75 வரைக்கும் ரூபா 10,000க்கு 14% வட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடுப்வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 585-77 இதில் ரூபா 2,500 கொடுக்கப்பட்டது மேலும் ரூபா 1,500உம் கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாண பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை திருநெல்வேலி செம்மண்கிடங்கு நிலபரப்பு 2 பதிவு இலக்கம் ப. 178/181 செம்மண்கிடங்கு நிலப்பரப்பு 1 குளி 16ம் இரு ஆதனங்களும் ஒன்றுகக்கூடி நிலப்பரப்பு 3 குளி 16 வீடு பயிர்களும் வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் தெற்கெல்லைக் காணிக்கு வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் இதனூடாக உள்ள வழிவாய்க்கால் பாவிப்புரித்து புறநீங்கலாக எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு இராமலிங்கம் பெண் செல்லம்மாவின் உரிமைக்காரரும் சண்முகநாதனின் ஆதனமும் மேற்கு முத்தையா பெண் தையல்முத்துவுக்கும் விஞசித்தம்பி வேலுப்பிள்ளைக்கும் தெற்கு விசுவநாதர் கதிரவேலுவுக்கும் விசுவநாதர் கனகரத்தினத்துக்குரிய ஆதனம் பதிவு இலக்கம் D 393/44

சி. செ. மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும் விலைபதிப்பாளரும்

விதானைவளவு
சித்தன்கேணி
30-11-78 1375

---

## Vocational Training Institute at Chundikuli Girls' College

CLASSES IN

- Home economics
- Scientific dress making
- Cookery
- Machine embroidery
- Handwork
- Shorthand & typing
- Bookkeeping
- Special classes in Spoken English

Admissions on the 29th of January. application forms will be available at the Chundikuli Girls' College office

Closing date for applications - 25th of January
1368

---

## வெற்றிடங்கள் - பத்து

இடம்: பெனின்சுலா கண்ணடித் தொழிற்சாலை
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பதவி: யந்திர உற்பத்திப் பகுதி, வேலை பழகுபவர்.
சம்பளம்: வேலை பழகும்பொழுது இரு மாதங்களுக்கு தினசரி ரூபா 5/-. அதன்மேல் திறமைக்கேற்ப சம்பளம் கூட்டப்படும்.
தகைமை: (a) 8-ம் வகுப்புக்கு மேல் சித்தி
(b) உயரம் 5 அடி 5 அங்குலத்துக்கு மேல்.

உடனடியாக நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 1367

---

## இம்மா என்றப்பிறைசஸ் லிமிற்றெட்

558, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் 20-1-79 சனிக்கிழமை முதல் மேல் குறிப்பிட்ட விலாசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென பொதுமக்களுக்கு அறிவிக்கிறோம்.

உங்களுக்குத் தேவையான

- 'இம்மா' விவசாய, வீட்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் (மண்எண்ணெயிலும், மின்சாரத்திலும் இயங்கக்கூடியவை)
- சைக்கிள்கள், மின்சார விசிறிகள், ரேடியோ, ரான்சிஸ்டர்கள்
- விவசாய மருந்துவகைகள், ஸ்பிறேயர்கள்
- மின்சாதன குளிர் பெட்டிகள், குக்கர்கள்
- கடைச்சல், பல்லு வெட்டும்.

மரவேலை இரும்பு வேலை செய்யும், தொழிற்சாலை இயந்திரங்கள் – மேலும் பல பல

எம்மை வந்து சந்தியுங்கள்–மிக திருப்தியடைவீர்கள்.
1364

# "இலங்கையில் கிராமிய சூழல் மாற்றங்கள்"

## பேராசிரியர் செல்வநாயகம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"இலங்கையில் உள்ள கிராமங்கள் இன்று அதிக அளவு மாற்றம் பெற்றுள்ளன. இலங்கையில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட சமூக, பொருளாதார, அரசியற் கொள்கைகளே இதற்கு முக்கிய காரணமாகும்"

இவ்வாறு இலங்கை மன்றக் கல்லூரியினால் பிரதேசரீதியாக ஒருங்குசெய்யப்பட்ட கருத்தரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியல் துறையில்பேராசிரியர் சோ செல்வநாயகம் "இலங்கையில் மாறிவரும் கிராமியச்சூழலும் தேசிய அபிவிருத்தியும்" என்னும் தலைப்பில் விரிவுரை நிகழ்த்துகையில் கூறினார்.

அவர் தமது விரிவுரையில் மேலும் கூறியதாவது:

"இலங்கையிலுள்ள கிராமங்கள் இன்று அதிக அளவுக்கு மாற்றம்பெற்றுள்ளன. சுதந்திரகாலத்தின் பின்பு இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட சமூக பொருளாதார - அரசியற் கொள்கைகளே இதற்கு முக்கிய காரணமாகும். சமூகரீதியாக இலங்கையில் சில முக்கியமான திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. இரண்டாவது யுத்தகாலத்தையடுத்து இலங்கையின் குடித்தொகையில் விரைவான அதிகரிப்பு ஏற்பட்டது இதனால் சமூக பொருளாதாரரீதியான சில திட்டங்கள் அவசியமாகவும் இருந்தன சமூகரீதியான ஒரு சிறந்த நடவடிக்கை இலவசக்கல்வித்திட்டமாகும்.

1943ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டத்தினால் ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழக கல்வி வரை மாணவர் இலவசமாகக் கல்வி பயில வாய்ப்பு ஏற்பட்டது. இலவசக்கல்வியைத் தொடர்ந்து போதனை மொழியிலும் மாற்றம் ஏற்பட்டது, மாணவர்கள் தாய் மொழியில் கல்வி பயிலும் வசதி ஏற்பட்டதனால் கிராமங்களிலேயே கல்வி கற்க வாய்ப்பு ஏற்பட்டது. மக்களுக்கு அத்தியாவசியமான உணவுவசதிகளையும் அரசாங்கம் வழங்கிவந்தது. இதற்காகப் பெருந்தொகையான பணத்தை மானியமாகவும் வழங்கியது. மருத்துவவசதிகளும் இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டன. குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள் முதலான தேவைகளுக்காகவும் முதலீடுகள் செய்யப்பட்டன. இத்தகைய சமூக நலன்கள் காரணமாக இலங்கையிலுள்ள கிராமங்கள் அதிக அளவுக்கு மாற்றமடைந்தன.

### பெரும் மாற்றங்கள்

பொருளாதார ரீதியாகவும் சுதந்திர காலத்தின் பின்பு கிராமமட்ட அளவில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இதற்கு முன்பு பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதியே முக்கிய பொருளாதாரமுறையாக இருந்தது. இக்காலத்திலிருந்து கிராமிய விவசாயிகளின் பொருளாதாரத்திற்கு முதன்மை அளிக்கப்பட்டது. வறண்டபிரதேசத்திலுள்ள பழைய குளங்கள் புனரமைக்கப்பட்டு விவசாயம் விஸ்தரிக்கப்பட்டது. புதிய நிலங்களில் பெருந்தொகையான மக்கள் குடியமர்த்தப்பட்டனர். நெற்செய்கை உட்பட விவசாயமுறைகளின் அபிவிருத்திக்காகப் பெருந்தொகையான முதலீடுசெய்யப்பட்டது போக்குவரத்து வசதிகள், சந்தை வசதிகள் முதலியனவும் விஸ்தரிக்கப்பட்டன சிறுகைத்தொழில்கள் என்பனவும் நிறுவப்பட்டன. இத்தகைய நடவடிக்கைகளினால் பெருகிவரும் மக்களுட் பலர் தொழில்வாய்ப்பினைப் பெற வாய்ப்பு ஏற்பட்டது.

### காரணம்

"சமூக - பொருளாதாரத் துறைகளில் கிராமமட்டரீதியில் பெரிய மாற்றங்கள் ஏற்பட சுதந்திரகாலத்தின் பின்பு அரசாங்கங்கள் பின்பற்றி வந்த கொள்கைகளே காரணமாகும். அரசாங்கக்கொள்கை, மக்களிடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து சிறந்த வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொடுப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது இதனாலேயே, சமூக முன்னேற்றம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கிராமங்கள் அதிக அளவுக்கு மாற்றம் அடையவும், கிராமமக்கள் தேசிய ரீதியாக அபிவிருத்தியில் பங்குகொள்ளவும் மேற்குறித்த சமூக - பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக இருந்தன" என்றார்.

(உ)

## சிகரட், குடிவகை விலை உயர்வு

சிகரட்டின் விலையும் உள்நாட்டு, வெளிநாட்டுக் குடிவகைகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. சிகரட்டும் குடிவகைகளும் மனிதனுக்கு அத்தியாவசியப்பொருள்களல்ல இவை இல்லாமலும் மனிதனால் வாழ முடியும்.

ஆனாலும் இவற்றுக்குப் பழக்கப்பட்டு அடிமையாகி விட்டவர்கள் இந்த விலை உயர்வையிட்டு அதிருப்தி அடைவார்களென்பதில் சந்தேகமில்லை.

சென்ற சில வாரங்களாக நாட்டில் சிகரெட்டுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது சிகரட் கம்பனி ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்துவருவதால் இவ்வித தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது இதற்கு முன்னரும் இப்படித் தட்டுப்பாடு ஏற்பட்டதுண்டு.

சிகரட்டுக்கு தட்டுப்பாடுஏற்படும்போதெல்லாம் கையிருப்பில் சிகரட் வைத்திருக்கும் வர்த்தகர்கள் 'சப் ஏஜண்டுகள்' மூலம் சிகரட்டுகளை வீதிகளிலும் ஹோட்டல்கள், கடைகளுக்கு வெளியேயும் விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதும் வழக்கம் முப்பது சதம் பெறுமதியான சிகரட் தட்டுப்பாடான சமயத்தில் எழுபத்தைந்து எண்பது சதத்திற்கும் விலை போகின்றது. இதேபோல் ஒவ்வொரு ரக சிகரட்டும் மும்மடங்காகவும் நான்கு மடங்காகவும் விலை போவது வழக்கமாகிவிட்டது.

இதனுடன் ஒப்பிடுகையில் அரசாங்கம் ஒரு சிகரட்டின் விலையை மூன்று சதத்தால் அதிகரித்தது பெரிய விஷயமல்ல.

குடிவகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டதும்கூட அவ்வளவு பெரிதாகச் சொல்லமுடியாது போயா விடுமுறை காலங்களிலும் அவசரகால நிலையின் கீழ் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட காலங்களிலும் சாராயம் மற்றும் குடிவகைகளுக்குப் பெருந்தொகைப் பணம் செலுத்தப்பட்டது நாடறிந்த விஷயம்.

மதுபானமும் சிகரட்டும் மனித சமுதாயத்துக்குக் கெடுதியானவை என்பதை எல்லா நாடுகளிலும் பலரும் பலவிதமாகப் பிரசாரம் செய்துவருகின்றனர். இந்தியாவில் பல மாநிலங்களில் மதுவை ஒழிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி இன்னமும் பூரண வெற்றியளிக்கவில்லை.

மதுபான வகைகளின் விலைகளை அதிகரிப்பதன் மூலம் மது பாவனையைக் குறைக்கலாம் அல்லது மதுவை ஒழிக்கலாமென்று மதுவொழிப்பைக் கொள்கையாகக் கொண்ட திரு ஜே. ஆர். தலைமையிலான அரசு கருதுகிறதோ தெரியாது இதுதான் அரசின் நோக்கமெனில் மிகக் கெடுதலான 'கசிப்பு' உற்பத்தி அதிகரிக்கஅதிகவாய்ப்பேற்படுமென்பதைச் சொல்லத் தேவையில்லை.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்கு உதவும் பொருட்டே இப்பொருள்களின் விலை அதிகரிக்கப்படுவதால் மக்கள் இதை வரவேற்பர்.

ஆனால் சென்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது எதிர்க்கட்சியினர் சிகரட், சாராயம் ஆகியவற்றின் விலை அதிகரிப்பு, உள்ளூராட்சி தேர்தலுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்றும் விரைவில் கஸெட் அறிவித்தல் மூலம் இந்த விலை அதிகரிப்பு அமுலுக்கு வருமென்றும் சொன்னதைஅரசு உண்மை என நிரூபித்துவிட்டதே!

## "உள வளர்ச்சிக்கு விளையாட்டு அவசியம்"

(கொக்குவில்)

"மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் வலுவூட்டவல்லது விளையாட்டுப் போட்டியாகும் நாம் நோயற்றவாழ்வு வாழவேண்டுமானால் அதற்கு நல்ல விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுதலும் நல்ல சாதனமாகும்"

இவ்வாறு மானிப்பாய் கிறீன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய மானிப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி தர்மலிங்கம் கூறினார்.

இத்திறப்பு விழா கழகத் தலைவர் என். விமலானந்தன் தலைமையில் நடைபெற்றது

திரு. தர்மலிங்கம் எம். பி. மேலும் கூறியதாவது:-

"விளையாட்டின் மூலம் பலருடைய நட்பைப் பெறமுடியும் விளையாட்டில் போட்டி இருக்க வேண்டுமே யொழிய பொறாமை இருக்கக்கூடாது. போட்டி மனப்பான்மையிருந்தால் நாம் எதையும் இலகுவாக சாதித்துவிட முடியும். பொறாமை மனப்பான்மை உடையவன் ஒருகாலமும் வாழ்க்கையில் முன்னேற முடியாது.

இளம் வயதில் சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்பவன் எதிர்காலத்தில் சுறுசுறுப்பு மிக்கவனாக நாட்டினதும் வீட்டினதும் முன்னேற்றத்தில் அக்கறை உடையவனாக திகழ்வான்" என்றார். [உ]

நீராடுவதால் உடல் தூய்மையாகிறது. இறைவனைப்பற்றி எண்ணுவதால் உள்ளம் தூயதாகிறது.

—விவேகானந்தர்.

## நன்றிகூறும் ஆராதனை

(அரியாலை)

யாழ்ப்பாண வளாகத்துக்கென முன்னைய அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி திரும்பவும் கல்லூரி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டதற்கு நன்றி தெரிவிக்கும் விசேட தோத்திர ஆராதனை வட்டுக்கோட்டை தென் இந்திய திருச்சபையின் அத்தியட்சாதீன ஆலயத்தில் நடைபெற்றது.

இந்தத் தோத்திர ஆராதனையில் யாழ். திருமண்டலப் பேராயல் அருட்பெருந்திரு டி. யே. அம்பலவாணர் அடிகள் பேருரை நிகழ்த்தினார் இந்த வைபவத்தில் பழைய மாணவர்கள் பெற்றோர் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆராதனையின் பின்னர் நிர்வாக அலுவலகக் கட்டிடத்தை முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் யாழ்ப்பாணக்கல்லூரி நிர்வாகிகள் சபையின் தலைவருமான திரு. யே எம் சபாரத்தினம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார் கல்லூரி அதிபர் திரு ராஜன் கதிர்காமர் வரவேற்றார்.

# மக்கள் கருத்து

## நன்கொடைப் பணம் அவசியம்தானா?

வடமாநில கல்வித்திணைக்களத்தால் 6ம் வகுப்பு பிரவேச போட்டி பரீட்சை மூலம் சகல பாடசாலைகளுக்கும் மாணவ, மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டார்கள். ஆனால் சில பாடசாலை அதிபர்கள் நன்கொடைப் பணம் தருமாறு கோருகின்றார்கள். அப்படி இல்லையென்றால் அனுமதி இல்லை என்கின்றார்கள். இப்படியென்றால் போட்டிப் பரீட்சை நடத்தியதன் காரணம் என்ன? தெரிவுசெய்யப்பட்ட மாணவர் / மாணவிகளுக்கு அதிபர்களினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் பிறப்புச் சான்றிதழ், மாணவர் விடுகைப் பத்திரம், வசதிக் கட்டணம் ஆகியவை கோரப்பட்டுள்ளன. நன்கொடைப்பணம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. பிள்ளைக்கு அனுமதி கிடைத்துவிட்டது என்ற சந்தோஷத்துடன் சென்ற தந்தை தாய்மார்களுக்கு நன்கொடை பணப்பிரச்னை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது இப்பணம் செலுத்தாவிட்டால் அனுமதி மறுக்கப்படுமோ என்ற அச்சத்திற்கும் ஆளாக வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. பணவசதிஇல்லாத பிள்ளைகள் இச்செயலால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இது விடயமாக கல்வித்திணைக்களம் உடன்நடவடிக்கை எடுக்குமா? அது மட்டுமல்லாமல் அப்பணத்துக்கான பற்றுச்சிட்டையில் முத்திரையின்றி வழங்குகிறார்கள்.

நீதி நேர்மைக்கு வழிகோல, கல்வி அதிபதி உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

திருமதி ப. பரமேஸ்வரி,
அரியாலை.

## சுகாதாரப் பகுதியினரின் கவனத்துக்கு.....

சன சமூக நிலையங்கள் புனிதமாக பாவிக்கப்படவேண்டியவை அது அமைந்துள்ள இடங்களும் அமைதியான சூழ்நிலையில் இருக்கவேண்டும். கோவிலையும் பாடசாலையையும் நாம் எப்படி பாவிக்கிறோமோ அதேபோல் இந்நிலையங்களைப் பாவிக்கவேண்டியது ஒவ்வொரு பிரஜையினுடைய கடமையுமாகும்.

யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் சில இடங்களில் சன சமூக நிலையங்களின் அருகிலே ஒருசிலர் தமது வருவாயைப் பெருக்கவேண்டும் என்பதற்காக கடலட்டைகளை அவித்து உலரவிடுகிறார்கள். கடலட்டைகளின் குடல் போன்ற பகுதியை பல இடங்களில் கொட்டி விடுவதால் அவை உலரத்தொடங்கியதும் துர்நாற்றம் வீசத்தொடங்குகின்றது. இதுமட்டுமல்லாது பழுதான ரயர்கள் வேறுபலவற்றை போட்டு அட்டையை அவிப்பதற்கான அடுப்பை எரிப்பதனால் ரயர்களிலிருந்து வரும் ஒருவித நச்சுத்தன்மையுள்ள புகை அதை சுவாசிக்கும் ஒவ்வொருவரையும் மயக்கம் அடையச்செய்கிறது.

இதனால் இரவு வேளைகளில் மக்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் அத்துடன் இதுநடைபெறும் கிராமமாக பாஷையூர் இருப்பதனால் அதன்சூழல் துர்நாற்றம் நிறைந்ததாக மாற்றப்படுகிறது இதனால் புனித அந்தோனியாரை நாடிவரும் பக்தகோடிகளும் மிகுந்த சிரமத்தை அனுபவிக்கின்றார்கள். இது பற்றி யாழ் மாநகர சுகாதாரப்பகுதி உடன் நடவடிக்கை எடுக்குமா என வினவப்படுகிறது

பி. வின்சென்ற்
யாழ்ப்பாணம்.

## மன்னார்ப் பகுதி பஸ்சேவை

மன்னார்ப் பகுதி இ. போ. ச. சேவை மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. தினந்தோறும் பஸ் தட்டுப்பாடினால், பெருந்தொகையான பிரயாணிகள் அவதியுறுகின்றனர். பஸ்வண்டிகள் அடிக்கடி பழுதடைந்துவிடுவதால் பிரயாணிகள் தனியார் வாகனங்களை நாடவேண்டியிருக்கிறது. குறிப்பாக மன்னார்-சங்குப்பிட்டி பஸ்சேவை சீர்கேடுற்றுள்ளது. பண்டிவிரிச்சான் பஸ் சேவையில் அதிக நெருக்கடி காணப்படுவதால் மடுக்கோவில் யாத்திரிகர்கள் மிகவும் அவதியுறுகின்றனர்.

வி. பிரான்சிஸ்
மன்னார்.

### புதிய அரசுக்கு சந்தர்ப்பம்:

# கார்ட்டர் கோரிக்கை ஈரானிய சமயத்தலைவரால் நிராகரிப்பு



தெஹ்ரான், ஜன 19 ஈரானில் நிலையான சமாதானத்தை தோற்றுவிக்கப் புதிய அரசுக்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் விடுத்துள்ள வேண்டுகோளை ஈரானிய சமயத் தலைவரும், தற்போது பாரிஸில் வசித்து வருபவருமான கொமோனி நிராகரித்துள்ளார்.

**வல்லரசுகள் தலையீடு**

ஈரானின் உள்விவகாரத்தில் வல்லரசுகள் தலையிடுவதைக் கைவிடவேண்டும் என்று தெமோனி தெரிவித்தார்.

புதிய பிரதமர் டாக்டர் பக்தியாரைப் பதவிதுறக்க வேண்டும் என்றும் பதவியேற்றுள்ள அரசு சட்டவிரோதமானது என்று கண்டனம் தெரிவிக்கப்படவேண்டும் என்றும் கொமோனி கூறியிருந்தார்.

இந்தவகையில் அரசுக்குஎதிராக ஆர்ப்பாட்டங்கள் இன்று நடத்தப்படுவதாக இருந்தது.

இது இவ்வாறு இருக்க, ஈரானின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடாது என்று திரு. கார்ட்டர் ஏற்கனவே அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## வேலணை ப. நோ. கூ. சங்க தலைவர் நடவடிக்கை

[வேலணை]

பாவனையாளர்களின் நலன் கருதி வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரையும் கட்டாயமாக சகல கிளைகளையும் திறந்து வைத்திருக்க வேண்டுமென கிளை முகாமையாளர்களை பணித்திருக்கின்றார்.

குறிப்பிட்ட நேரத்திற்கு திறக்காத கிளை முகாமையாளர்கள் மீது ஒழுங்குப்பிரச்சினைகள் எடுக்கப்படுமெனவும் அவர் அறிவித்திருக்கின்றார்.

உரிய நேரத்திற்கு சடைகள் திறக்கப்பட்டு வருகின்றனவா என பார்ப்பதற்கும் திடீர் பரிசோதனைகளை நடாத்தவும் திட்டமிட்டிருப்பதாகவும் சங்கத்தலைவர் திரு. சி. இராசரத்தினம் தெரிவித்தார். [உ]

## "செஞ்சிலுவைச் சங்கத்தின்

# தூயபணியில் அரசியல் தலையீடு கூடாது

## பிரதமர் தேசாய் கோரிக்கை



சென்னை, ஜன. 19 "செஞ்சிலுவைச் சங்கத்தின் தூய பணிகளில் எந்தக் கூட்டத்திலும் அரசியல் புகலிடமளிக்கக்கூடாது. அரசியல் தலையீடு மாசைத்தான் உண்டாக்கும்"

இவ்வாறு பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் சென்னையில் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்க விழாவில் பேசுகையில் வலியுறுத்தினார்

பிரதமர் தமதுரையில் கூறியதாவது:- மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு செஞ்சிலுவைச் சங்கம் பெரும் பணியாற்றி வருகின்றது மனிதனுக்கு உண்டாகும் துன்பம் பெரிதோ சிறிதோ இச்சங்கம் விரைந்து உதவி புரிகிறது.

இச்சங்கத்தின் சேவை ஏனையோருக்குமுன்மாதிரியாகி உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளிக்கிறது.

**தாய்மார் பங்கு**

தமிழகத்தில் இச் சங்கத்தின் பணி மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது. இதில் தாய்மார் எடுத்துள்ளபங்கையும் பாராட்டுகிறேன்" என்றார். (உ)

### இப்படியும் நடக்கிறது!

[உடுப்பிட்டி]

பாடசாலையிலிருந்து வெளியேறும் பிள்ளைக்கு வழங்கப்படவேண்டிய பாடசாலை விடுகைப்பத்திரம் அப் பிள்ளையின் தந்தையின் பெயருக்கு வழங்கப்பட்ட அதிர்ச்சிச்சம்பவம் கரவெட்டிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் நிகழ்ந்துள்ளது

கந்தப்பு பாலசுப்பிரமணியம் என்பவரின் மகனை தயாபரன் என்பவரே பாடசாலையிலிருந்த விடுகைப் பத்திரம் பெறவேண்டிய மாணவராவார். ஆனால், பிரஸ்தாப அதிபர், பிள்ளையின் தகப்பனான கந்தப்பு பாலசுப்பிரமணியம் என்பவரின் பெயரிலேயே விடுகைப்பத்திரத்தை வழங்கியுள்ளதுடன் அப் பிள்ளையின் பெற்றோரின் பெயர் என்னுமிடத்தில் தகப்பனின் பெயர் கந்தப்பு சுப்பிரமணியம் என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது!

### மண்ணெண்ணை குடித்தாராம்

(யாழ்ப்பாணம்

மண்ணெண்ணை குடித்ததாகக் கூறப்படும் வாலிபர் ஒருவர் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுவிலில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மாணிக்கம் குணராஜா (18 வயசு) என்பவரே பிரஸ்தாப வாலிபராவார்.

பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். (தை-உ)

### கொழும்பில் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் கலந்துகொண்டு சமய விரிவுரை நிகழ்த்திய தருமை ஆதீன பல்கலைக்கழக முதல்வர் வித்துவான் வி சா. குருசாமிதேசிகர் வடபகுதியில் உள்ள சாவகச்சேரி. யாழ்ப்பாணம், மாவிட்டபுரம், நீர்வேலி, பருத்தித்துறை, புங்குடுதீவு, இணுவில் ஆகிய இடங்களில் சமயச் சொற்பொழிவுகளை முடித்துக்கொண்டு 17ம் திகதி கொழும்பு சென்றார்.

கொழும்பு விவேகானந்த சபையாரின் திருமுறை விழாவில் கலந்துகொள்ளும் வித்துவான் குருசாமிதேசிகர் இராமகிருஷ்ணமிஷன், அகில இலங்கை இந்துமாமன்றம் போன்றவை ஒழுங்குசெய்யும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

கொழும்பு நிகழ்ச்சிகள் முடிந்தபின் கதிர்காமயாத்திரையையும் மேற்கொள்ளுவார். எதிர்வரும் 23ம் திகதி காலை தலைமன்னாரிலிருந்து கப்பல் மூலம் தமிழகம் திரும்புகின்றார். (உருத்-நிரு)

### வேலை நிறுத்தம்:

## அவசரகாலநிலை பிரகடனமில்லை; பிரிட்டிஷ் அரசு முடிவு

லண்டன், ஜன. 19 பிரிட்டனில் தற்போதுள்ள நிலைமையில் அவசரகால நிலையை அமுல் செய்ய வேண்டியதில்லை என்று பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்துள்ளது

பிரிட்டனில் லொறிச் சொந்தக்காரர்களும் மற்றும் சில பிரிவினரும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

இதன் எதிரொலியாக அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்படலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது

ஆனால் இது அவசியமில்லை என அரசு தீர்மானித்துள்ளது. [உ]

### 'சபரி மோட்சம்'

சென்னை, ஜன. 19 சென்னை அடையாறு கலாக்ஷேத்திரத்தில் நடைபெற்ற 'சபரி மோட்ச' என்ற நாட்டிய நாடகத்தை பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் நேரில் கண்டுகளித்தார். [உ]

# "அகந்தையற்ற வாழ்வே வெற்றி அளிக்கும்"

## முதல்வர் எம். ஜி. ஆர். அறிவுரை

சென்னை, ஜன. 19 "ஒவ்வொரு தனிமனிதனது வாழ்க்கையும் அவனிடத்தில் உள்ள ஆற்றலும் பொது நலனுக்குப் பயன்பட்டால் சமுதாய வளர்ச்சியில் பூரணவெற்றி கிட்டுவது நிச்சயம். அகந்தை அகத்தில் குடிகொண்டால் எதிலும் வெற்றி கிடைப்பது அசாத்தியமே'

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம் ஜி இராமச்சந்திரன் சென்னையில் நடைபெற்ற செஞ்சிலுவைச் சங்க விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றிவரும் அளப்பரிய பணிகள் குறித்து முதலமைச்சர் பாராட்டுத் தெரிவித்தார்

தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி விழாவிற்கு தலைமை வகித்தார். திருமதி சரோஜினி வரதப்பன் விழாவில் வரவேற்புரை நிகழ்த்தினார். (உ)


# பாலர்களுக்கு பயனுள்ளது

சிறந்த நைலோன் கொண்டு செய்யப்பட்ட "டெக்" ஜூனியர் பற்களின் எல்லாப் பகுதிகளையும் சென்றடைந்து சுத்தம் செய்கிறது.

குழந்தைகளில் சாதாரணமாக சொத்தைக்கு வழிவகுக்கும் பழுப்பை நீக்குகிறது. "டெக்" கொண்டு தினமும் காலையில் முதல் வேலையாகவும், இரவில் நித்திரைக்கு செல்லும் முன்னரும் பல் துலக்கச் செய்யுங்கள்.

சிறுர்களின் பல், முரசு ஆகியவற்றை உறுதியாகவும், சுகமாகவும், வைத்திருக்க - "டெக்"



டெக் ஜுனியர் அவனுடைய முதல் பல் துலக்கியாக இருக்கட்டும்

விநியோகஸ்தர்கள்:-
CIC கெமிக்கல் இண்டஸ்ரீஸ் (கொழும்பு) லிட்.
ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு-1.
தொலைபேசி: 28421-5

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
கமலஹாசன் — ஆலம்
**மன்மதலீலை**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
கமலஹாசன் - ஜெய்சித்ரா
**சத்யம்**

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
LOVE OF A NEGRO
(winner of gold medal)
FAMILY
ENTERTAINMENT


பருத்தித்துறையில்

## ரூ. 70,000 செலவில் மினிக் கச்சேரி

[புலோலி]

பருத்தித்துறையில் விரைவில் 'மினிக்' கச்சேரி ஒன்று நிறுவப்படவுள்ளது. இதற்கென 70 000 ரூபா செலவில் நவீன கட்டடம் ஒன்று நிறுவப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது [உ]


**REGAL** NOW SHOWING
(Jaffna) Daily at 4-30 7-00 & 9-30 p m.
STEWART GRANGER
in
**SODOM AND GOMMORAH**
(Scope-Color)

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 76 2
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி - தேவிகா - முத்துராமன்
பி. எஸ். வீரப்பா
**ஆண்டவன் கட்டளை**
(புத்தம் புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—தேவிகா
எஸ். எஸ். ஆர்.—விஜயகுமாரி
**சாந்தி**

4-வது ஜனத்திரள் வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-00, 7-00, 10-00
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

மகத்தான 2-வது மாதம்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா
மற்றும் பலர் நடித்த
**உயர்ந்தவர்கள்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
**லலிதா**

**லிடோ** (யாழ் நகர்) தினசரி காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
**ஆசை அறுபது நாள்**

தினசரி 4 காட்சிகள்
**ராணி** (யாழ். நகர்) எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
**சக்கரவர்த்தித் திருமகள்**
(புதிய பிரதி)

2-வது ஜனத்திரள் வாரம்
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
**பயணம்**


## நோயாளியைக் காணவில்லையாம்

[யாழ்ப்பாணம்]

யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் திடீரென காணாமல் போய்விட்டாராம்.

நாவாந்துறையைச் சேர்ந்த லோறன்ஸ் (வயது 38) என்பவரே பிரஸ்தாப நபர் என தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலையில் இருந்து இவரைக் காணவில்லையாம். [கை-உ]

## இன்றைய இராசிப்பலன்

தை மாதம் 7-ந் திகதி
சனிக்கிழமை
(20-1-79)

**மேடம்:-** கடன்தொல்லை அதிகரிக்கும். தொழிலில் மந்த நிலை ஏற்படும். ஆயுதபீடைக் கிடமுண்டு. அவதானம் வேண்டும்.

**இடபம் -** மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு நண்பர்களின் நல்லுரைகள் உங்களைப்பரவசப்படுத்தும் நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாவதற்கிடமுண்டு

**மிதுனம்:** மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றுமிடத்தில ஒத்துழைப்புக்கிடைக்கும். சிலருக்குப் பதவியுயர்வும் கிடைக்கும் பக்குவமான தினம்.

**கடகம்:-** துள்ளிவரும்வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையையும் சோபிதமடையச்செய்யும் எதிர்பாராத விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு பெரியோர் ஆதரவும் கிடைக்கும்.

**சிங்கம்:-** கடமையாற்றுமிடத்தில் சதிவேலைகள் நடக்கக்கூடும். வியாபாரத்துறையில் நஷ்டத்திற்கிடமுண்டு எதிலும் நிதானம் விரும்பத்தக்கது.

**கன்னி:-** அபிப்பிராய பேதங்களுக்கிடமுண்டு. ஆறுதல் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள் ஆணவத்தை அடக்கின் அமைதிக்கு இடமுண்டு.

**துலாம்:-** இல்லம் இன்று கட்டிவெல்லம் போல் இனிக்கும் இனிய வார்த்தைகளின் மூலம் மற்றவர்களைக் கவர்ந்து கொள்ளுவீர்கள். பிரச்னைகள் பல இன்று முடிவுபெறும்

**விருச்சிகம்:** மனதில் ஆத்திரம் அலைமோதும். வாகனச் சாரதிகள் நிதானத்துடன் இருக்கவும். சகோதரவழியாலும் சஞ்சலம் தோன்றக்கூடும்.

**தனுசு:-** பொறியியலாளர்களுக்குப் பொன்னான தினம். மாதருவழிப் பொருள் வரவிற்கும் இடமுண்டு. வாகனம் செலுத்துவோருக்கு சிறப்பான தினம்.

**மகரம்:-** நீண்டநாள் பிணி இன்றுநிவர்த்தியாவதற்கிடமுண்டு. புத்திரர்களால் மனதுக்கு திருப்தி ஏற்படும். கணவன் மனைவி உறவு சுமுகமாகவிருக்கும்.

**கும்பம்:-** தூற்றல் கணை தொடுப்பதற்கு எதிரிகள் முனைவர். அபாயகரமான தொழிலில் ஈடுபடுவோர் அதிக கவனம் செலுத்தவும். சில சச்சரவுகளுக்கு இடமேற்படும். திருப்தியற்றதினம்.

**மீனம்:-** குடும்பவாழ்க்கை குதூகலம் நிரம்பியதாகவிருக்கும். காதலர்களாயின் இத்தினம் கற்கண்டுபோல் இனிக்கும் தித்திப்பான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கால்கள் துண்டிக்கப்பட்ட ஆணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை - மல்லாகம் ரயில்நிலயங்களுக்கிடையில் தண்டவாளத்தருகில் ஆண் ஒருவரது சடலம் கிடக்கக் காணப்பட்டது.

இரு கால்களும் துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

பொலிசார் இம் மரணம் தொடர்பாகவிசாரணை நடத்தி வருகின்றனர். (கை-உ)

## இன்று நடைபெறும் போட்டிகள்

(பலாலி)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூக நிலயம் நடாத்தும் இன்று ஆரம்பமாகும் அமரர் சி. கந்தவனம் ஞாபகார்த்த கேடயத்திற்கான 1ம் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் (11 வீரர்) கட்டுவன் விசுவநாதப்புலவர் வி. க. வை எதிர்த்து குளமன்கால் சென் சேவியர் வி க வும் பலாலி உதய கலைவாணி வி. க. வை எதிர்த்து தெல்லிப்பளை திருமகள் வி. கவும், மோதவிருக்கின்றன

7 வீரர் போட்டியில் புன்னாலைக்கட்டுவன் பிளையின் ஈகிள்ஸ் வி க வை எதிர்த்து உரும்பராய் மின்னல் வி க வும், மயிலிட்டி கண்ணகி வி. க. வை எதிர்த்து பலாலி அண்ணா வி. க வும் மோதவிருக்கின்றன.

நாளை நடைபெறும் 11பேர் கொண்ட போட்டியில் வயாவிளான் ஜொலி போட்ஸ் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய வி. க வும், 7 பேர் போட்டியில் ஈவினை பறக்கும் இளைஞர் வி க வை எதிர்த்து ஊரெழு றோயல் வி. க. வும், உரும்பராய் சென்மைக்கல் வி. க. வை எதிர்த்து பலாலி உதயகலைவாணி வி. க. வும் ஒட்டகப்புலம் சென்மேரி வி. க. வை எதிர்த்து ஆவரங்கால் ஐக்கிய வி க.வும் மோதவிருக்கின்றன. (கொச். நி.)

## இன்று

[கொக்குவில்]

யாழ். நுண்கலை மன்றத்தின் ஆதரவில் திரு ஐ வேலாயுதபிள்ளையின் இன்னிசைக் கச்சேரி இன்று மாலை யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. [உ]

## தாச்சிப் போட்டி

[நெல்லியடி]

பருத்தித்துறை லயன்ஸ் கிளப் ஆதரவில் நடைபெற்ற தாச்சிப் போட்டியில் கரவெட்டி மேற்கு 'அறிவொளி' விளையாட்டுக்கழகம் 1ம் இடத்தைப் பெற்று வெற்றிபெற்றது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இத்தாச்சிப் போட்டியில் கரணவாய் வடக்கு 'சித்திராலயா' விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தைப் பெற்றது. பல கழகங்கள் மோதிய இத்தாச்சிப் போட்டியைப் பார்வையிட பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். [உ]


**Cantabria Institute**
[SHOOT OF OXONIA]
வகுப்புகள் I A A பகுதி [I II III] Just commenced
I A A பகுதி IV 31-1-79
ஆங்கிலம் 30 மணித்தியாலங்களில்
விரிவுரையாளர் திரு. I. T. BENEDICT
விபரங்களுக்கு: சங்கரப்பிள்ளை கட்டிடம்,
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 1382


## பிஸ்கால் விற்பனை

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

கந்தையா சின்னத்தம்பி
86, பலாலி றோட், யாழ்ப்பாணம். — வழக்காளி

வழ இல எம் எஸ்.: 5174 எதிராக

எம். குழந்தைவேலு கதிரவேலு,
ஆனைப்பந்தி சந்தி, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
— எதிராளி.

மேற்சொல்லிய எதிராளியிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா 3755/-ம் மேலும் முதல் ரூபா 3500/-க்கும் 10-9-73ம் திகதி தொடக்கம் 19-12-73 வரை 18% வட்டியும் தீர்வைத் திகதியிலிருந்து முழுத்தொகை இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 418-35 சதமும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1979-ம் ஆண்டு மாசி மாதம் 27-ம் திகதி செவ்வாய்க்கிழமை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்திலிருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற பிஸ்கால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை 22 1-41-ம் திகதி உத்தரவுபெற்ற நில அளவையாளர் வி. சண்முகலிங்கம் 1495 ஏ இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நில அளவைபடத்தில் 2-ம்துண்டென்று குறிக்கப்பட்டதும் யாழ்ப்பாணமாநகரசபை எல்லைக்குள் பெரியகடை வடக்கு மாக்கற் றோட் 36-ம் இறைவரி மதிப்பிலக்கம் கொண்ட 'அனிஞ்சிலடியும் பத்திரித்திடலும், நில பர 1 குளி 4 27/32ம் புதிய கடைக்கட்டிடமும் கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இன்னும் கிழக்கு அகத்தில் உள்ள பொதுக் கை ஒழுங்கைக்குச் செல்லும் குறித்த நில அளவைப் படத்தில் 'வை' எனக் குறிக்கப்பட்ட பொதுப்பாதையில் பாதையாகப் பாவிக்கும் உரித்தும் எல்லை கிழக்கு குருசாமி செட்டி நாகலிங்கம் செட்டி பெண் ஆச்சிக்கண்ணம்மா வடக்கு குறித்த நில அளவைப் படத்தில் 'வை' எனக் குறிக்கப்பட்ட பொதுப்பாதையும் காதர் மொகிதீன் பெண் காதியும்மாவுக்குரிய ஆதனம். மேற்கு மேற்சொல்லப்பட்ட காதியம்மாவுக்கும் சுல்றூன் சிககநாதனுக்குமுரிய ஆதனங்கள் தெற்கு சுல்ருன் சிக்கநாதருக்குரிய ஆதனமும் றோட்டும் இதனடங்கலும இது யாழ்ப்பாணக் காணிப் பதிவகத்தில் டி 241/95ம் 352/49ல் பதியப்பட்டிருக்கின்றது.

P. பாக்கியநாதன்,
பிஸ்கால்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
18-1-79. 1366

# "கம்போச்சியா மீதான வியட்னும் ஆக்கிரமிப்பு"

## இலங்கைக் கம்யூனிஸ்ட் (இடது) கண்டனம்

[கொழும்பு]

''கம்போச்சியாமீது, சோவியத் ஆதரவுடன் வியட்னும் ஆக்கிரமிப்பு நடத்தியுள்ளதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்ருேம். கம்போச்சிய மக்களும், புரட்சிகர மக்கள் படையும் திரு. பொல்பொட்டை செயலாளராகக்கொண்ட கம்போசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கிழ் ஆக்கிரமிப்பாளர்களுக்கு பரணக்குழி தோண்டும் மாபெரும்பணிக்கு கம்போச்சியமக்கள் ஐக்கியத்துடன் நடத்தும் யுத்தத்துக்கு நீதிவிரும்பும் உலகமக்கள், கம்போச்சிய மக்களுக்கு உறுதுணையாக நிற்பார்கள். வெளி ஆக்கிரமிப்பாளர்களை வெற்றி கொண்டு தங்களின் நாட்டை மீட்பார்கள் என்பதில் சந்தேகமில்லை'' என்று இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி(இடது) பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கை மேலும் கூறுவதாவது;

''சோவியத் யூனியனுடன் வியட்னும் சில மாதங்களுக்கு முன்னர் கைச்சாத்திட்ட 'நட்புறவு ஒத்துழைப்பு ஒப்பந்த'மை காய்வதற்குள்ளாக 1978 டிசம்பர் 2ந் திகதி கம்போச்சியாமீது டாங்கிகள், விமானத் தாக்குதலை நடத்தி பச்சையாக ஆக்கிரமிப்பு நடத்தியுள்ளது. இதனுல் கிழக்காசியாவில் ஒரு பிராந்திய மேலாதிக்கத்தை நிலைநாட்ட வியட்னும் முயற்சித்துவருகிறது. இம் முயற்சியில் ஆக்கிரமிப்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டு இறுதி வெற்றி கம்போச்சிய மக்களுக்கே என்பதே உலக மக்களினதும் ஆசியமக்களினதும் நம்பிக்கையாகும்.''

## இன்று தியாகராஜர் உற்சவம்

(கொக்குவில்)

இலங்கை இசைச்சங்கத்தின் ஆதரவில் தியாகராஜர் உற்சவம் இன்றுமுதல் மூன்றுதினங்கள் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில்நடைபெறவிருக்கிறது இன்றுகாலை ஸ்ரீமத் சோமசுந்தரதம்பிரான் சுவாமிகள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

செல்வி யசோதரா கர்தசாமி திருமதி நாகேஸ்வரி பிரமானந்தர், திரு. கே.ஆர் நடராசா ஆகியோரின் பாட்டுக்கச்சேரிகளவயலின், மிருதங்கம் சகிதம் இன்றுநடைபெறும். [உ]

## கார் விபத்தில் சிக்கியவர் மரணம்

[கொக்குவில்]

சில தினங்களுக்கு முன்னா சிவலிங்கம் புளியடியில் நிகழ்ந்த கார் விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வண்ணுர்பண்ணையைச் சேர்ந்த சின்னையா நல்லதம்பி நேற்று ஆஸ்பத்திரியில் காலமாளுர்.

இம்மரணம் சம்பந்தமாக யாழ். நீதவானும்திடீர்மரண விசாரணை அதிகாரியுமான திரு. எஸ். அமிர்தலிங்கம் விசாரணை நடத்திஞர்.

யாழ் போக்குவரத்துப் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி திரு சேனதிராசா கார்ச்சாரதியான இளையதம்பி விக்கினேஸ்வரனை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி விமல் திசநாயக்கா கார்ச்சாரதியை ஆயிரம் ரூபா பிணையில் செல்லும்படியும் பெப்ரவரி 7-ல் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் கூறிஞர்.

## ஹிந்திமொழி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி

மேற்கொள்ளப் படுகிறது' என்ருர்.

ஹிந்தி மொழி பேசாத மக்கள மீது. ஹிந்தி திணிக்சப்படுமென்ற பேச்சுக்கே இடமில்லை. ஹிந்தியை அவசியம் கற்கவேணடுமென்ற சட்டமும் எதுவும் கிடையாதென்றும் திரு. தேசாய் கூறிஞர்.

எதிர்க்கட்சிகள் ஆட்சி நடத்துகின்ற மாநிலங்கள்உட்பட சகல மாநிலங்களுடனும் மத்திய அரசு நல்லுறவுடனேயே இருக்கிறது என்றும் பிரதமர் சொன்னுர்.

புதுச்சேரி

## தரப்படுத்தல்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் உள்ளேயும், வெளியேயும் கிளர்ச்சிசெய்யவேண்டும்.

தரப்படுத்தல் குறித்துத் தெளிவுபடுத்த மாநாடு ஒன்றுக்குத் தம்மை அழைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஜனுதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனுவை இரு தடவை கடித மூலம் கேட்டிருந்தது தெரிந்ததே. [ம-இ]

## ஜனுதிபதி ஆணைக்குழு சட்டமூலம்:

# 'அமிர்', சிறிமா, மைத்திரி சபாநாயகர் சந்திப்பு

[கொழும்பு]

விசேட ஜனுதிபதி ஆணைக்குழு திருத்தச் சட்டமூலத்தின் '27 ஏ' பிரிவு தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், சுதந்திரக்கட்சித் தலைவிதிருமதி சிறிமாவோ பண்டாரநாயகா, திரு. மைத்திரிபாலசேனநாயகா ஆகியோர் நேற்று சபாநாயகர் ஜனுப் மாக்கான் பாரிகீரைச் சந்தித்தனர்.

விசேட ஜனுதிபதி ஆணைக்குழு திருத்தச்சட்டமூலத்தில் '21 ஏ' பிரிவு சேர்க்கப்பட்டது குறித்து ஆராய பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கவேண்டுமென்று சுதந்திரக்கட்சி ஏற்கனவே பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது. சபாநாயகர் இப்பிரேரணையைப் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரப்புத்தகத்தில் இடம்பெருமல் தடுத்துவிட்டார்.

இப்பிரேரணையை ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறச் செய்யவேண்டுமென்றுகோரும் பொருட்டே மேற்குறிப்பிட்ட மூவரும் நேற்றுச் சபாநாயகரைச் சந்தித்தனர்

நேற்றைய சந்திப்பின்போது குறிப்பிட்ட பிரேரணையை ஒழுங்குப்பத்திரத்தில் சேர்த்துக்கொள்ளச் சபாநாயகர் இணக்கம் தெரிவித்தார். [ம-இ

## பல்கலைக்கழக . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி}

களில் தமிழ்மாணவர்கள் மிகக் குறைவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தமக்குத் தெரியவந்துள்ளதாகவும் கூட்டணியினர் அமைச்சரிடம் எடுத்துக்கூறினர்.

### கல்பகே பதில்

இதற்குப்பதிலளித்த உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் கல்பகே தெரிவித்ததாவது:-

இவ்வருடத்தில் பல்கலைக் கழகங்களில் அனுமதிபெறும் மாணவர்கள் குறித்து ஒரளவு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனினும் தமிழ் மாணவர்களுக்கு அநீதி விளைவிக்கப்படவில்லை.

### சிறில் மத்யூ கூறியதுபோல்...

விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் திரு சிறில் மத்யூ பாராளுமன்றத்தில் தெரிவித்த அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்ற தாம் அறிந்துள்ளதாகவும் இக்குழுவினர் அமைச்சரிடம் தெரிவித்தனர்

### புள்ளிகளையும் வெளியிடவேண்டும்

ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளுடன் மாணவர்கள் பரீட்சையில் பெற்ற புள்ளிகளையும் வெளியிடவேண்டுமென்றும் இவ்வாறு வெளியிடுவதனுல் தமிழ் மாணவர்கள் மனக்குறைகள் ஒரளவுக்கு நீங்குமென்றும் கூட்டணியினர் கேட்டுக்கொண்டனர்

### செயலாளர் பதில்

பரீட்சைச் சட்டப்படி புள்ளிகளை வெளியிடுவது சட்டத்திற்கு விரோதமானதென்றும் அதை வெளியிட முடியாதென்றும் கல்வியமைச்சின் செயலாளர் திரு திசநாயக்கா கூறிஞர்.

திரு சிறில் மத்யூ மட்டும் எவ்வாறு பரீட்சைப் புள்ளிகளைப்பெற்ருர் என்றும் கூட்டணிக்குழுவினர் கேட்டனராம்,

### அமைச்சர் பதில்

இவ்விடயங்கள் குறித்துத் தாம் ஜனுதிபதிக்கு எடுத்துக் கூறுவதாக கல்வி அமைச்சர் குழுவினரிடம் தெரிவித்தார். (ம-இ)

## குருநகர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கைவிடப்படும் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளாராம். (ம-இ)

# அடுத்தவாரம் நடைபெறும் இந்துசமய மகாநாடு

(கொக்குவில்)

இரண்டாவது அனைத்துலக இந்துசமயமகாநாடு வடஇந்தியாவிலுள்ள அலகாபத்தில் அடுத்தவாரம் நடைபெறும்.

முதலாவது அனைத்துலக இந்துசமய நகாநாடு சிங்கப்பூரில் நடைபெற்றது

அலகாபாத்தில் இம்மாதம் 25-ந் திகதிமுதல் மூன்று நாட்கள்வரைநடைபெறும் இரண்டாவதுமகாநாட்டில் எண்பது நாடுகளைச்சேர்ந்த ஆயிரத்துக்குமதிகமான இந்து அறிஞர்கள் கலந்துகொள்வார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த இந்துமன்றத்தினரையும் இம்மகாநாடடில் கலந்துகொள்ளுமாறுஅழைப்பு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து இம்மாநாட்டில் பேராசிரியர் சோ. செல்வநாயகம் தலைமையில் டாக்டர் சண்முகதாஸ் சு. பாக்கியநாதன், எஸ். ரவீந்திரராஜ், கே. நாகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்கின்ருர்கள்.

## அந்தியேட்டி

சண்டிருப்பாய் ஜெகராசசிங்கம் பரராசசேகரம் அவர்கள் 22-12-78 அன்று அதிகாலையில் காலமாளுர் அன்னரின் அந்தியேட்டி கிரிகைகள் இன்று சனிக்கிழமை (20-1-79) காலை கீரிமலையிலும், நாளை ஞாயிற்றுக்கிழமை (21-1-79) தொல்புரத்திலும் நடைபெறும், என்பதை அறியத்தருகிருேம்

-பரராசசேகரம் குடும்பத்தினர்.

1389

## கொழும்பு-காங்கேசன்துறை

# ரயில் பிரயாணிகள் அவஸ்தை பாராளுமன்றத்தில் 'யோகேஸ்' புகார்

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்குச் செல்லும் ரயிலில் பிரயாணிகள் படும் அவஸ்தையை யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் நேற்று முன்திவம் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறிஞர்.

ஒத்திவைப்புப் பிரேரணை விவாதத்தின் போது திரு யோகேஸ்வரன் யாழ்ப்பாண ரயில் சேவை பற்றி குறிப்பிட்டார்.

ரயிலில் பிரயாணிகள் இருப்பதற்கு போதிய ஆசனங்கள் இல்லாமையால் பெரும்பாலானவர்கள் நின்று கொண்டே நெடுந்தூரம் பிரயாணம் செய்கிருர்கள். பலர் மலசலக் கூடத்திற்கருகிலும் வழிகளிலும் நின்றுகொண்டும் அமர்ந்து கொண்டும் பிரயாணம் செய்கிருர்கள் என்று கூறிய திரு. யோகேஸ்வரன் தாம் கூட பேர்த்தில் இடமின்மையால் கீழே படுத்துக்கொள்ள நேர்ந்தது என்றும் தமக்காவது இந்த வசதி கிடைத்தது ஆனல் பெரும்பாலான பிரயாணிகள் இந்த வசதிகூட இல்லாமல் அவஸ்தைப் படுகிருர்கள் என்ருர்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் மேலதிக ரயில் சேவைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (ம)

# பிரதமர்-எம் ஜி ஆர் சந்திப்பு

சென்னை, ஜன 19

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் பிரதமர் திரு மொரார்ஜி தேசாயுடன் இன்று காலை 20 நிமிடங்கள் உரையாடிஞர்.

இச்சந்திப்பு ஆளுநர் மாளிகையில் இடம்பெற்றது.

தமிழகத்தில் இருதின விஜயத்தை முடித்துக்கொண்டு இன்றுகாலை புதுடில்லி புறப்பட்ட பிரதமரை விமான நிலையத்தில் முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆரும், ஆளுநர் திரு. பட்வாரியும் வழியனுப்பிவைத்தனர். (உ)

## 'சைவக்கோயிற் கிரியைகள்'

(கொக்குவில்)

கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிவநெறிக்கழகத்தின் சார்பில் நாளை பிற்பகல் பேராசிரியர் கலாநிதி கா. கைலாச நாதக்குருக்கள் சைவக்கோயிற் கிரியைகள் என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்

## நவீனசந்தை அடிக்கல் நாட்டு விழா

[கொக்குவில்]

கோண்டாவில் கிழக்கு சந்தியில் அமைந்திருக்கும் காணியில் நவீன சந்தைக் கட்டிடத்திற்கான அத்திபாரக்கல் இன்று நாட்டப்படும்.

இச்சந்தையை நவீனமுறையில் மாற்றி அமைப்பதற்கான முயற்சியை நல்லூர் எம். பி திரு மு சிவசிதம்பரம் மேற்கொண்டுள்ளார், நவீன சந்தைக்கான அத்திபாரக்கல்லை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. வி எஸ். எஸ். அகஸ்தின் நாட்டி வைப்பார்.

## கல்வித்திணைக்கள

## கடன்சபைத் தேர்தல்

[அரியசாலை]

வடமாநிலக் கல்வித்திணைக்களக் கடன்சபைத் தேர்தல் இம்மாதம் 27ம் திகதி நடைபெறவிருக்கிறது

இக்கடன்சபைக்கு கல்வித்திணைக்கள சிற்றூழியர்கள், பாடசாலை லிகிதர்கள், கல்வி அதிகாரிகள், வித்தியாதிபதி அலுவலக லிகிதர்கள் ஆகியோர் சார்பில் ஒவ்வொரு உறுப்பினரும் வடபகுதியில் சேவையாற்றும் ஆசிரிய-ஆசிரியைகள் சார்பில் 17 பேர்களுமாக மொத்தம் 21 பேர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவ. மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 20-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice
The Eelanaadu Post Bex No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.